# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 10 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளவழகன் | வயது | |
| தகப்பனார் பெயர் | | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் விளக்குடி சிவன் கோவில் தெருவில் குடியிருந்து ஆசாரி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமியை தெரியும். எனது மகள்கள் ஜெயகீதா, தேவிபாலா இருவருக்கும் திருவாரூர், கும்பகோணம், சென்னை மற்றும் இரண்டு ஊர்களில் நீதிமன்றத்தில் காலிபணியிடம் இருப்பதாகவும் எதிரி சக்திவேல் மூலமாக வேலை வாங்கி கொள்ளலாம் என்று சோழபாண்டியில் உள்ள எனது மாமா மகள் தேவி என்பவர் என்னிடம் கூறினார். 19.03.2018 ம் தேதியன்று நான் திருவாரூர் துர்க்காலாயா ரோட்டில் உள்ள எதிரி சக்திவேல் (1வது எதிரி ) வீட்டிற்கு சென்று அவரை பார்த்து அவரிடம் நீதிமன்றங்களில் வேலை வாங்கி தருவது சம்பந்தமாக கேட்டேன். அப்போது எதிரி சக்திவேல் என்னிடம் வேலை வாங்கி தருவதற்கு ஒரு நபருக்கு ரூ. 2 லட்சம் தொகை என்றும் முன்பணமாக ஒருவருக்கு ரூ.1 லட்சம் வீதம் என் இரண்டு மகள்களுக்கும் மொத்தம் ரூ.2 லட்சம் கொடுக்கவேண்டும் என்று கூறினார். மீதத்தொகையான ரூ.2 லட்சத்தை வேலை கிடைத்தவுடன் கொடுக்க வேண்டும் என்றார். அதனால் எதிரி சக்திவேலிடம் அப்போதே ரூ.50,000/- பணத்தை கொடுத்தேன். அதன்பிறகு மறுநாள் 20.03.2018 ம் தேதியன்று ரூ.1,50,000/-த்தை எதிரி சக்திவேலிடம் கொடுத்தேன். அப்போது என் மகள்களின் படிப்பு சான்று நகல்கள் மற்றும் பயோ டேட்டா ஆகியவற்றை எதிரி சக்திவேலிடம் கொடுத்தேன். பணம் கொடுத்த பிறகு அடிக்கடி

எதிரி சக்திவேலிடம் சென்று கேட்டபோது ஒரு மாதத்தில் ஜுன், ஜுலைக்குள் வேலை வந்துவிடும் என்று கூறினார். நான் மீண்டும் சிலநாட்கள் கழித்து கேட்டபோது பணத்தை கோர்ட்டில் வேலை செய்பவரிடம் கொடுத்துள்ளேன். அங்கிருந்து சரியான பதில் வரவில்லை. அதனால் அவர்கள் மீது கேஸ் போட்டிருப்பதாக சொன்னார். கேஸ் முடிந்ததும் என் பணத்தை திருப்பி தருவதாக சொன்னார். ஆனால் இதுநாள்வரை என்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுக்கவில்லை. போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். நடந்த விபரம் சொன்னேன்.

**கு.வி. (1 வது எதிரி தரப்பில்)**

நான் சாட்சி சொல்ல வந்தது யார் கொடுத்த புகாருக்கான வழக்கு என்றால் சக்திவேல் கொடுத்த புகாருக்கான வழக்கில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் சக்திவேல் மீது தனிப்பட்டமுறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னை யார் விசாரணைக்கு வரச்சொன்னார்கள் என்றால் எஸ்.பி. ஆபீஸிலிருந்து போன் மூலமாக என்னை விசாரணைக்கு வரும்படி அழைத்தார்கள். என்னுடன் யார், யார் விசாரணைக்கு வந்தார்கள் என்றால் பரமேஸ்வரி, பரமையன் மற்றும் இரண்டு நபர்கள் வந்தார்கள். விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் விசாரணை மட்டும் செய்தார்கள். நான் பணம் கொடுத்து ஏமாந்த விபரத்தை போலிசாரிடம் யார் கூறியது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் சக்திவேலிடம் பணம் கொடுத்தபோது என்ன வேலை கிடைக்கும் என்று என்னிடம் சொன்னார் என்றால் கிளார்க் வேலை, டைப்பிஸ்ட் வேலை கிடைக்கும் என்று சொன்னார். யார் மூலமாக நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக சக்திவேல் என்னிடம் சொன்னார் என்றால் ஓய்வுபெற்ற நீதிபதி மூலமாக வேலை வாங்கி தருவதாக சொன்னார். சக்திவேல் நீதிமன்றத்தில் வேலை செய்யவில்லை என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் சக்திவேல் வீட்டில் குடியிருக்கும் நீதிமன்றத்தில் வேலை செய்யும் ஒருவர் மூலமாக ஏற்பாடு செய்வதாக சொன்னார். சக்திவேலை மீண்டும் நான் விசாரித்தபோது பணத்திற்காக வழக்கு கொடுத்திருப்பதாக என்னிடம் சொன்னார் என்றால் சரிதான்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்றதால் குறுக்குவிசாரணை முடிக்கப்படுகிறது.

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 11 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேவிபாலா | வயது | |
| தகப்பனார் பெயர் | | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் விளக்குடி சிவன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். அ.சா.10 இளவழகன் என் அப்பா ஆவார். நான் பி.பி.ஏ., படித்துள்ளேன். டைப் கிளாஸ் முடித்துள்ளேன். ஆஜர் எதிரிகளில் எதிரி சக்திவேலை தெரியும். எனது அப்பாவின் மாமா மகள் தேவி என்பவர் மன்னார்குடி தென்பாதியில் உள்ளார். அவர் நீதிமன்றத்தில் காலி பணியிடங்கள் உள்ளது என்றும், எதிரி சக்திவேல் மேற்படி காலியாக உள்ள இடங்களில் வேலை வாங்கி தருவார் என்றும், அவரை சென்று பார்க்கும்படியும் என் அப்பாவிடம் சொன்னார். மேற்படி வேலை காலியிடமானது திருவாரூர், கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் உள்ளதாக சொன்னார். அதனால் நானும், என் அப்பாவும், என் தங்கை ஜெயகீதாவும் 19.03.2018 ம் தேதியன்று திருவாரூர் சென்று துர்க்காலயா ரோட்டில் உள்ள எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்றோம். அப்போது வேலைக்காக ஒரு நபருக்கு ரூ.1 லட்சம் தரவேண்டும் என்று கூறினார். அப்போது எனது அப்பா அவரிடமிருந்த ரூ.50,000/-த்தை எதிரி சக்திவேலிடம் கொடுத்தார். மீதம் ரூ.1,50,000/-த்தை மறுநாள் என் அப்பா எதிரி சக்திவேலிடம் கொடுத்தார். அப்போதும் நானும், என் தங்கையும் என் அப்பாவுடன் சென்றோம். பணம் கொடுக்கும்போது ஒரு மாதத்தில் வேலை கிடைக்கும் என்று எதிரி சக்திவேல் கூறினார். ஆனால் ஒரு மாதத்தில் எதிரி சக்திவேல் சொன்னபடி வேலை கிடைக்கவில்லை. பிறகு செல்போனில் எதிரி சக்திவேலை தொடர்பு

கொண்டு வேலை சம்பந்தமாக கேட்டோம். அதன்பிறகும் பலமுறை நேரடியாக எதிரி சக்திவேலை பார்த்து வேலை சம்பந்தமாக கேட்டோம். மே மாதம் நீதிமன்றம் விடுமுறை என்றும் அதனால் ஜுன், ஜுலை மாதத்தில் கண்டிப்பாக வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார். ஆனால் ஜுன்,ஜுலை மாதத்திலும் வேலை கிடைக்கவில்லை. மீண்டும் சக்திவேலிடம் கேட்டபோது நீதிமன்றத்தில் வேலை செய்யும் ஒரு நபரிடம் எங்களிடம் வாங்கிய பணத்தை கொடுத்திருப்பதாகவும், அந்த நபரின் பெயர் கோவிந்தலெட்சுமி என்றும் அவர் சரியாக பதிலை சொல்லாததால் அவர் மீது வழக்கு கொடுத்திருப்பதாகவும் எதிரி சக்திவேல் சொன்னார். இந்த நிலையில் திருவாரூர் எஸ்.பி. ஆபீஸிலிருந்து போன் மூலம் எங்களிடம் பணம் கொடுத்தது சம்பந்தமாக விசாரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதனால் நானும், என் அப்பாவும், என் தங்கையும் திருவாரூர் எஸ்.பி. ஆபீஸிற்கு சென்றோம். அங்கு போலிசார் எங்களை விசாரணை செய்தார்கள். நடந்த விபரம் சொன்னோம்.

**கு.வி. (1 வது எதிரி தரப்பில்)**

நாங்கள் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எஸ்.பி.ஆபீஸிலிருந்து போன் மூலம் கூப்பிட்டதால்தான் விசாரணைக்கு சென்றோம். முதல் விசாரணையில் கூறிய விபரத்தைதான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். போலிசார் எங்களை விசாரித்தபோது பணமோசடி கேஸ் இருப்பதாக சொன்னார்கள் என்றால் சரிதான்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

போலிசார் விசாரித்தபோது எதிரி சக்திவேலிடம் மீண்டும் சென்று கேட்டபோது கோர்ட்டில் வேலை செய்யும் கோவிந்தலெட்சுமி என்பவரிடம் பணம் கொடுத்திருப்பதாக சொன்ன விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு எந்த சங்கதியும் சொல்லவில்லை என்றாலும் 2 வது எதிரியை வழக்கில் சம்பந்தப்படுத்த வேண்டும் என்பதற்காக மிகைபடுத்தி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 12 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயகீதா | வயது | |
| தகப்பனார் பெயர் | | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் விளக்குடி சிவன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். அ.சா.10 இளவழகன் என் அப்பா, அ.சா.11 தேவிபாலா என் அக்கா ஆவார்கள். நான் பி.பி.ஏ., படித்துள்ளேன். டைப் கிளாஸ் முடித்துள்ளேன். ஆஜர் எதிரிகள் சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமியை தெரியும். எனது அப்பாவின் மாமா மகள் தேவி என்பவர் மன்னார்குடி தென்பாதியில் உள்ளார். அவர் நீதிமன்றத்தில் காலி பணியிடங்கள் உள்ளது என்றும், எதிரி சக்திவேல் மேற்படி காலியாக உள்ள இடங்களில் வேலை வாங்கி தருவார் என்றும், அவரை சென்று பார்க்கும்படியும் என் அப்பாவிடம் சொன்னார். மேற்படி வேலை காலியிடமானது திருவாரூர், கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் உள்ளதாக சொன்னார். அதனால் என் அப்பாவும், என் அக்கா தேவிபாலாவும் 19.03.2018 ம் தேதியன்று திருவாரூர் சென்று துர்க்காலயா ரோட்டில் உள்ள எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்றார்கள். அப்போது வேலைக்காக ஒரு நபருக்கு ரூ.2 லட்சம் என்றும் முன்பணமாக ஒரு ஆளுக்கு ரூ.1 லட்சம் தரவேண்டும் என்று கூறியுள்ளார். இந்த விபரத்தை என் அப்பா என்னிடம் சொன்னார். அப்போது எனது அப்பா அவரிடமிருந்த ரூ.50,000/-த்தை எதிரி சக்திவேலிடம் கொடுத்தார். மீதம் ரூ.1,50,000/-த்தை மறுநாள் என் அப்பா எதிரி சக்திவேலிடம் கொடுத்தார். பணம் கொடுக்கும்போது ஒரு மாதத்தில் வேலை கிடைக்கும் என்று எதிரி சக்திவேல் கூறியுள்ளார். ஆனால் ஒரு மாதத்தில் எதிரி

சக்திவேல் சொன்னபடி வேலை கிடைக்கவில்லை. பிறகு செல்போனில் எதிரி சக்திவேலை தொடர்பு கொண்டு வேலை சம்பந்தமாக கேட்டோம். அதன்பிறகும் பலமுறை நேரடியாக எதிரி சக்திவேலை பார்த்து வேலை சம்பந்தமாக கேட்டோம். மே மாதம் நீதிமன்றம் விடுமுறை என்றும் அதனால் ஜுன், ஜுலை மாதத்தில் கண்டிப்பாக வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார். ஆனால் ஜுன்,ஜுலை மாதத்திலும் வேலை கிடைக்கவில்லை. மீண்டும் சக்திவேலிடம் கேட்டபோது நீதிமன்றத்தில் வேலை செய்யும் ஒரு நபரிடம் எங்களிடம் வாங்கிய பணத்தை கொடுத்திருப்பதாகவும், அந்த நபரின் பெயர் கோவிந்தலெட்சுமி என்றும் அவர் சரியாக பதிலை சொல்லாததால் அவர் மீது வழக்கு கொடுத்திருப்பதாகவும் எதிரி சக்திவேல் சொன்னார். இந்த நிலையில் திருவாரூர் எஸ்.பி. ஆபீஸிலிருந்து போன் மூலம் எங்களிடம் பணம் கொடுத்தது சம்பந்தமாக விசாரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதனால் நானும், என் அப்பாவும், என் அக்காவும் திருவாரூர் எஸ்.பி. ஆபீஸிற்கு சென்றோம். எங்களுடன் எங்களை போல் பணம் கொடுத்த பரமேஸ்வரி, பெரமையன், செந்தில் மூலமாக பணம் வாங்கிகொடுக்கப்பட்ட இரண்டு நபர்களும் வந்திருந்தார்கள். அங்கு போலிசார் எங்களை விசாரணை செய்தார்கள். நடந்த விபரம் சொன்னோம்.

**கு.வி. (1 வது எதிரி தரப்பில்)**

என் தகப்பனார் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எஸ்.பி.ஆபீஸிலிருந்து போன் மூலம் கூப்பிட்டதால்தான் விசாரணைக்கு சென்றோம். எத்தனை பேர் எஸ்.பி. ஆபீஸ் சென்றோம் என்றால் ஆறு பேர் சென்றோம். எதற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரி சக்திவேலிடம்தான் என் அப்பா பணம் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். தொகை கொடுத்தபோது நான் செல்லவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறிய விபரத்தைதான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

பணம் கொடுத்த விபரம் என் அப்பா சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி கோவிந்தலெட்சுமியிடம் பணம் கொடுத்திருப்பதாக என் அப்பாவிடம்தான் சக்திவேல் சொன்னதாக தெரிந்துக்கொண்டேன் என்றால்

சரிதான். விபரங்கள் எதுவும் நேரடியாக தெரியாமல் 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் 2 வது எதிரியை தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 13 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நகுலன் | வயது | |
| தகப்பனார் பெயர் | | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் மன்னார்குடி மீனாட்சியம்மன் கோவில் தெருவில் வசித்து ஆசாரி வேலை செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். மன்னார்குடியில் உள்ள விஸ்வகர்மா சமூகத்திற்கு திருவாரூர் விஸ்வகர்மா சமூகத்திலிருந்து நீதிமன்றங்களில் வேலை இருப்பதாக சொல்லியுள்ளார்கள். விஸ்வகர்மா சமூகம் மூலமாக எதிரி சக்திவேலை தெரிந்து கொண்டேன். பலதடவை விஸ்வகர்மா சமூக கூட்டங்களில் அனைவரும் பங்கேற்கும்போது எதிரியை பார்த்துள்ளேன். மன்னார்குடி விஸ்வகர்மா சமூகத்தில் நடராஜன் என்பவர் வேலை காலிபணியிடம் சம்பந்தமாக எதிரி சக்திவேலை அணுகும்படி கூறினார். அதனால் என் மனைவிக்கு வேலை வாங்குவதற்காக நான் எதிரி சக்திவேலை திருவாரூர் துர்க்காலயா ரோட்டில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று 20.03.2018 ம் தேதியன்று சந்தித்தேன். அப்போது எதிரி சக்திவேல் என்னிடம் திருவாரூரில் நீதிமன்றத்தில் வேலை காலிபணியிடம் உள்ளதாகவும், ஒரு நபருக்கு வேலைக்கு ரூ.2 லட்சம் தொகை கொடுக்க வேண்டும் என்றும், அதற்கு முன்பணமாக ரூ.1 லட்சம் பணம் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார். அப்போதே எதிரி சக்திவேலிடம் முன்பணம் மற்றும் என் மனைவியின் பயோ டேட்டா கொடுத்தேன். அதேபோல என் தங்கை மகள் நித்யா என்பவருக்கும் வேலைக்காக சக்திவேலிடம் அன்றைய தினமே ரூ.1 லட்சம் பணமும், கல்வி சான்றின் நகலும் கொடுத்தேன். பணம் கொடுத்தபோது எதிரி சக்திவேல் என்னிடம்

ஒரு மாதத்தில் வேலை கிடைத்துவிடும் என்று கூறினார். ஒரு மாதம் கழித்து 1வது எதிரி சக்திவேலை பார்த்தபோது அவர் வேலைக்கான பணத்தை அவர் வீட்டில் குடியிருக்கும் கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்திருப்பதாக சொன்னார். மேற்படி கோவிந்தலெட்சுமி கோர்ட்டில் வேலை செய்வதாக சொன்னார். வேலை வரவில்லை. என் தங்கை மகள் நித்யாவிற்கு வேலை வராததால் அவர்கள் என்னிடம் தெடர்ந்து வற்புறுத்தி வந்ததால் எதிரி சக்திவேலிடம் பலமுறைக்கு பிறகு கேட்டு நித்யாவிற்கான தொகை ரூ.1 லட்சத்தை எதிரி சக்திவேலிடமிருந்து பெற்று சென்றேன். எதிரி சக்திவேலிடம் என் மனைவியின் வேலை பற்றி பணம் கொடுத்திலிருந்து 7, 8 மாதம் கழித்து கேட்டபோது வேலை வந்துவிடும் என்று பொறுமையாக இருங்கள் என்று சொன்னார். பின்னர் 1 1/4 வருடங்கள் கழித்து திருவாரூர் குற்றபிரிவு போலிசார் என்னை போன் மூலம் அழைத்தார்கள். அப்போது போலிசார் என்னிடம் நான் சக்திவேலிடம் பணம் கொடுத்த விபரத்தை கேட்டார்கள். அப்போது போலிசார் வேறு யாருக்கு பணம் கொடுத்தீர்கள் என்று கேட்டபோது நித்யாவிற்காக பணம் கொடுத்து வாங்கி விட்டேன் என்று சொன்னேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் தனிப்பட்ட புகரர் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் வரச்சொல்லிதான் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். நான் எதற்காக பணம் கொடுத்தேன் என்றால் நீதிமன்றத்தில் வேலை வாங்குவதற்காக கொடுத்தேன். சக்திவேல் யார் மூலமாக வேலை வாங்கி தருவதாக என்னிடம் சொன்னார் என்றால் அவர் வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் கோவிந்தலெட்சுமி என்பவர் மூலமாக வேலை வாங்கி தருவதாக சொன்னார். நான் சக்திவேலிடம் பணத்தை திரும்ப கேட்டபோது பணம் சம்பந்தமாக வழக்கு நடந்து வருவதாக கூறினார். சக்திவேல் பணத்தை யாரிடம் கொடுத்திருப்பதாக கூறினார் என்றால் கோவிந்தலெட்சுமியிடம் பணத்தை கொடுத்திருப்பதாக கூறினார். இந்த விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

சக்திவேல் கோவிந்தலெட்சுமியிடம் பணம் கொடுத்ததாக சொன்னவிபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என்னிடம் வாங்கிய பணத்தை கொடுக்காமல் என்னை திசைதிருப்ப 2 வது எதிரியிடமிருந்த குடும்ப முன்விரோதத்தை மனதில் வைத்து 2 வது எதிரியிடம் பணத்தை கொடுத்திருப்பதாகவும், அவர் தன் வீட்டில் குடியிருப்பதாகவும் பொய்யாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. 2 வது எதிரியை எனக்கு தெரியும் என்பதாக போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

## CC No.25/2020

2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 14 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காமாட்சி | வயது | |
| தகப்பனார் பெயர் | | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் மன்னார்குடி மீனாட்சியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். அ.சா.13 நகுலன் எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகள் சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமியை தெரியும். 20.03.2018 ம் தேதியன்று எனக்கு திருவாரூர் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக எனது கணவர் 1வது எதிரி சக்திவேலிடம் திருவாரூர் துர்க்காலயா ரோட்டில் உள்ள அவரது வீட்டில் வைத்து ரூ.1 லட்சம் பணம் கொடுத்தோம். அப்போது நானும் உடனிருந்தேன். அப்போது எதிரி சக்திவேல் ஒரு மாதத்தில் வேலை கிடைத்துவிடும் என்று கூறினார். ஆனால் அவர் சொன்னபடி வேலை எதுவும் கிடைக்கவில்லை. மீண்டும் பலமுறை அவரிடம் வேலை சம்பந்தமாக கேட்டோம். எனக்கு வேலைக்காக பணம் கொடுத்ததுபோலவே 20.03.2018 ம் தேதியன்று என் நாத்தனார் மகள் நித்யாவிற்கும் வேலைவேண்டும் என்று எதிரி சக்திவேலிடம் ரூ.1 லட்சம் பணம் கொடுத்தோம். நித்யா வீட்டிலிருந்து வேலை வேண்டாம் என்று பணத்தை மீண்டும் பெற்றுதரும்படி எங்களை தெந்தரவு செய்து வந்ததால் எதிரி சக்திவேலிடம் நித்யாவிற்காக கொடுத்த பணத்தை கேட்டோம். மேற்படி நித்யாவிற்காக கொடுத்த பணத்தை நாங்கள் பணம் கொடுத்ததிலிருந்து 7, 8 மாதம் கழித்து திரும்ப கொடுத்தார். எனது வேலைசம்பந்தமாக கேட்டபோது 2வது எதிரி கோவிந்தலெட்சுமி யிடம் பணம் கொடுத்துள்ளேன். அவர் ஜட்ஜ்அம்மா மூலமாக வேலை வாங்கி தருவார் என்று

சொன்னார். அதனால் நாங்கள் இன்னும் சிறிது காலம் பொறுத்திருந்தோம். அப்போதும் வேலை கிடைக்கவில்லை. 2019 ம் வருடத்தில் 3, 4 வது மாதத்தில் எதிரி சக்திவேலிடம் சென்று வேலை சம்பந்தமாக கேட்போது அவர் கேஸ் போட்டிருப்பதாகவும், கேஸ் மூலமாக பணத்தை பெற்று தருவதாகவும் சொன்னார். ஆனால் இதுநாள் வரை வேலை வாங்கி கொடுக்கவில்லை. பிறகு எனது கணவர் மட்டும் திருவாரூர் வந்து போலிசார் விசாரணைக்கு ஆஜரானார். பிறகு என்னை போலிசார் வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். போலிசாரிடம் நான் நடந்த சம்பவம் பற்றி கூறினேன்.

**கு.வி. (1 வது எதிரி தரப்பில்)**

நான் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறிய விபரத்தைதான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

போலிசார் விசாரணையில் நான் நேரடியாக சென்று 1வது எதிரி சக்திவேலை சந்திந்தேன் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன்என்றால் சொல்லியுள்ளேன். எதிரி சக்திவேலை சந்திந்தபோது அவர் பணத்தை 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்துள்ளதாக கூறிய விபரத்தையும், ஜட்ஜ்மூலமாக வேலை வாங்கி தருவதாக சொல்லியுள்ளார் என்ற விபரத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி கோவிந்தலெட்சுமி தெரியும் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் மேற்கண்ட எந்த விபரத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும் தற்போது போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதன்முறையாக அதிகப்படுத்தி, 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.